1993 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரவக்குறிச்சி க. பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து சின்னதாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்து இப்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி ஒன்றியத்தையோ அல்லது இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையோ பிரிக்கின்றபோது அரசு என்ன அளவுகோலை வைத்து பிரிக்கிறது? மக்கள் தொகை அடிப்படையிலா அல்லது நிலபரப்பு அடிப்படையிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊராட்சி ஒன்றியத்தை பிரிக்கவேண்டும் என்றால், அதன் பரப்பளவு, ஆண்டு வருமானம் மற்றும் செலவு, கட்டமைப்பான தன்மை, தனித்து இயங்கும் தன்மை, பொதுமக்கள் நலன், நிர்வாக நலன், அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் போன்ற அனைத்து அம்சங்களும் பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 414, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

414—

வலசை கிராமத்தில் கிணறு வெட்டும் பணி.

*12670— டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் நகரில் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க வலசை கிராமத்தில் கிணறு வெட்டும் பணி ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் அத்திட்டம் துவங்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 7 லட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது. 2 கிணறுகள்தான் உள்ளன. ஜவ்வாது மலையின் அடிவாரத்தில் உள்ள வலசை கிராமத்தில் நீர் ஊற்று இல்லாத காரணத்தினால் செங்கத்தில் ஓடும் செய்யாறு ஆற்றில் கிணறு தோண்டப்பட்டுள்ளது. வறட்சிக் காலத்திலே மணல் ஊற்று, அடி ஊற்று வற்றி நீர் ஊற்று நின்றுவிடுகிறது. எனவே, 4-வது கிணறு தோண்டி செங்கம் நகருக்கு குடிநீர் பிரச்சினை தீர அரசு ஆவன செய்யுமா? தோப்பவாடி கிராமத்திலே வறட்சி நிவாரண திட்டத்தில் கிணறு வெட்டப்பட்டு இருக்கிறது. தோப்பவாடி கிணற்றில் தூர் வாரப்பட்டால் தண்ணீர் பிரச்சினை நீங்கும் நிலை ஏற்படும். இதை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விழைகின்றேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரினுடைய குடிநீர் தேவையினுடைய அளவை மையமாகக் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகையைக் கணக்கிலே கொண்டும், செங்கம் நகர் முழுவதற்கும் தேவையான குடிநீரை முழுமையாக வழங்க தென்பண்ணை ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு, அதிலிருந்து குடிநீர் சேகரித்து, வழிப்புற கிராமங்களுக்கும் பயன்படும் அளவில் திட்டம் அமைக்க ஒரு முழுமையாக ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 415, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை.

வினா எண் 416. திரு. தே. ஜனார்த்தனன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

416—

விழுப்புரத்தில் கால்நடை மருத்துவமனை கட்டுதல்

*98742—திரு. தே. ஜனார்த்தனன்:
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தில் கால்நடை மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?